**<u>தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**முன்னிலை. திருமதி.S.சுஜாதா, எம்.ஏ., எம்.எல்.,**
**தலைமை தாங்கும் அலுவலர்,**
**காஞ்சிபுரம்.**

2024 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 14ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**I.D. No.144/2021**

**CNR No.TNKP18-000339-2021**

S.யோகராஜா,(வ-39)
த/பெ. சுப்பையன்,
பிளாட் எண்.68, 5-வது குறுக்கு தெரு,
அன்னை மரியா அவென்யூ,
வீராபுரம், ஆவடி,
சென்னை - 600 055. ...... மனுதாரர்/தொழிலாளி

/எதிராக/

நிர்வாகம்,
மியூங் சங் இந்தியா பிரைவேட் லிமிடெட்,
எண்.276, 277, 278 ஸ்ரீ கஜலட்சுமி நகர்,
இருங்காட்டு கோட்டை கிராமம்,
காஞ்சிபுரம் மாவட்டம் 602 117. ...... எதிர்மனுதாரர்/நிர்வாகம்

இந்த தொழிற்தகராறு வழக்கு கடந்த 07.06.2024 அன்று இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு வந்தபோது மனுதாரர் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் திரு.எஸ்.குமாரசாமி, திரு.கு.பாரதி, திரு.க.சுரேஷ், எம்.கே.நிவேதா மற்றும் திரு.ஜெ.மோகன்ராஜ் ஆகியோர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.எம்.இளங்கோவன், திரு.எம்.தண்டாயுதபாணி மற்றும் திரு.ஆர்.கார்த்திக் ஆகியோர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்ட நிலையில் மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டு ஆவணங்களை பரிசீலித்து இன்று நீதிமன்றம் வழங்கும்,

## தீர்வம்

1) எதிர்மனுதாரர் மனுதாரருக்கு அளித்த வேலை நீக்கம் அநியாயமானதென்றும் அவருக்கு பணி தொடர்ச்சியுடன், பின் சம்பளத்துடன் மற்றும் இதர பயன்களுடன் மீண்டும் வேலை வழங்க எதிர்மனுதாரருக்கு உத்திரவிட வேண்டுமென்று தொழிற்தகராறு சட்டப்பிரிவு 2A(2)ன் கீழ் இந்த தொழிற்தகராறு வழக்கை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார்.

**2.) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள தொழிற்தகராறு சட்டப்பிரிவு 2A(2)ன் கீழான கோரிக்கை மனுவின் சுருக்கம்:-**

மனுதாரர் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 1.11.2006 முதல் டூல் ரூம் ஆப்ரேட்டராக நல்ல முறையில் பணி செய்து வந்தார். மனுதாரர் கடைசியாக வாங்கிய மாதச்சம்பளம் ரூ.28,750/-. எதிர்மனுதாரர் தொழிற்சாலையில் 200க்கும் மேற்படிட்ட தொழிலாளர்கள் பணிபுரிகின்றார்கள். 04.03.2015 தேதியில் மனுதாரரும் மற்றவர்களும் செங்கை அண்ணா மாவட்ட ஜனநாயக தொழிலாளர் சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்ந்தார்கள். இது குறித்து கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. 21.05.2015 தேதியிட்ட கடிதத்தில் தொழிலாளர்கள் தொழிற்சங்கத்திலிருந்து விலக வேண்டுமென்று நிர்வாகம் அறிவிப்பு வெளியிட்டது. இது குறித்து 22.05.2015 தேதியில் சமரச அதிகாரி முன்பு தொழிலாளர்கள் சங்கத்தின் மூலம் புகாராக செய்யப்பட்டது. மீண்டும் 26.05.2015 அன்று நிர்வாகம் அளித்த அறிவிப்பில் தொழிற்சங்கத்தைவிட்டு வெளியேற வேண்டுமென்று கூறப்பட்டிருந்தது. சங்கத்தைவிட்டு விலகாத மனுதாரர் மற்றும் சில

தொழிலாளர்கள் மீது நிர்வாகம் பொய்யான குற்றச்சாட்டினை கூறியது. 02.07.2015 அன்று மனுதாரர் Work Order Log book-ல் எழுதவில்லை என்று பொய்யான குற்றச்சாட்டின் பேரில் 03.07.2015 அன்று குற்றச்சாட்டு குறிப்பணை வழங்கியது. இதற்கு 14.07.2015 அன்று மனுதாரர் விளக்க கடிதம் கொடுத்தார். அதன் பிறகும் 13.07.2015 அன்று அதே குற்றச்சாட்டின் பேரில் மீண்டும் நிர்வாகம் கடிதம் அளித்தது. இதற்கு 21.07.2015 அன்று மனுதாரர் பதில் கொடுத்திருந்தார். இந்நிலையில் மனுதாரர் பணி இடை நீக்கம் செய்யப்படுவதாக தெரிவித்து 22.07.2015 தேதியில் உத்தரவு வழங்கப்பட்டது. மனுதாரரை பழி வாங்கும் நோக்கத்தில் துறை விசாரணை செய்வதற்காக விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்டதாக 05.08.2015 தேதியில் கடிதம் அனுப்பியது. அதன் அடிப்படையில் 19.09.2015 தேதியில் விசாரணை அதிகாரி தன்னுடைய விசாரணையை துவங்கிய போது அவர் ஒருதலைபட்சமாக நடந்துக்கொண்டதால் விசாரணை அதிகாரியை மாற்ற வேண்டுமென்று மனுதாரரும் சக தொழிலாளர்களும் கடிதம் கொடுத்ததின் பேரில் 14.10.2015 அன்று விசாரணை அதிகாரி மாற்றப்பட்டு புதிய விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்டார். 31.10.2015 தேதியில் புதிய விசாரணை அதிகாரி தன்னுடைய விசாரணையை துவங்கினார். மீண்டும் விசாரணை அதிகாரி ஒருதலைபட்சமாக விசாரணை நடத்தியதாக குறிப்பிட்டு மனுதாரர் ஆட்சேபனை செய்து கடிதம் அனுப்பியதால் அதற்கு விசாரணை அதிகாரி 31.12.2015 தேதியில் அனுப்பிய பதில் கடிதத்தில் இனி வரும் விசாரணை நடவடிக்கைகள் வீடியோ மூலம் பதிவு செய்து அதன் நகல் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால்

அதன் பின்பு 09.01.2016 நடந்த விசாரணை நடவடிக்கைகளில் விசாரணை தொகுப்பின் வீடியோ நகல் மனுதாரருக்கு முழுமையாக வழங்கப்படவில்லை. 31.10.2015 தேதியில் விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு, மனுதாரர் விசாரணை நடத்த கோரிய தேதிகளில் விசாரணை நடத்தாமல், மனுதாரரின் நியாயமான கோரிக்கையை பரிசீலிக்காமல் MW3 திரு.காளிராஜ் அவர்களை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு தராமல், 10.05.2016 அன்று ஒருதலைபட்சமாக முடிக்கப்பட்டு, 20.09.2017 தேதியில் விசாரணை அதிகாரியின் முடிவு அறிக்கை மனுதாரருக்கு அனுப்பப்பட்டது. அந்த முடிவு அறிக்கையில் மனுதாரரின் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கு மனுதாரர் 21.12.2017 தேதியில் பதில் கடிதம் கொடுத்தார். அதனை நிர்வாகம் பொருட்படுத்தாமல் 2வது காரணம் கோரும் அறிவிப்பு 04.06.2019 அன்று அனுப்பப்பட்டது. அதற்கு உரிய விளக்கத்தை மனுதாரர் கொடுத்தார். அதனை ஏற்றுக்கொள்ளாத நிர்வாகம் 31.07.2019 தேதியில் மனுதாரரை வேலை நீக்கம் செய்துவிட்டதாக கடிதம் அனுப்பப்பட்டது. அத்துடன் ரூ.1,28,270/-க்கான காசோலையும் அனுப்பப்பட்டிருந்தது. இந்த தொகையில் பணிக்கொடை தொகை மட்டும் நிர்வாகத்திற்கு திருப்பி அனுப்பி வேலை வழங்க வேண்டுமென்று மனுதாரர் கடிதம் அனுப்பினார். அதன் பிறகும் வேலை வழங்காத காரணத்தினால் தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு தொழிற்தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதற்கு நிர்வாகம் தாக்கல் செய்த பதிலுரையில் உண்மைக்கு மாறான தகவல் தெரிவிக்கப்பட்டது. சமரச அலுவலர் முன்பு நடத்தப்பட்ட விசாரணையில் முடிவு

எட்டப்படாததினால் 16.03.2020 அன்று சமரச முறிவு அறிக்கை வழங்கப்பட்டது. எனவே மனுதாரருடைய வேலை நீக்கம் தொழிற்தகராறு சட்டம் 1947 25(G) பிரிவிற்கு புறம்பானது அநியாயமானதென்றும் அதனால் பின்சம்பளம், பணித்தொடர்ச்சி மற்றும் இதர பயன்களுடன் மீண்டும் வேலை வழங்க எதிர்மனுதாரருக்கு உத்தரவு செய்யப்பட வேண்டும் என்று தொ.த.சட்டம் 1947 பிரிவு 2(A)(2)ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மனுதாரர் தரப்பில் தொ.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு தொ.த.சா.ஆ.1 முதல் தொ.த.சா.ஆ.50 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டார்.

**4) இவ்வழக்கில் தீர்க்கக்கூடிய பிரச்சனை யாதெனில்,**

மனுதாரர் இந்த வழக்கில் எதிர்மனுதாரருக்கு எதிராக கோரும் பரிகாரங்கள் கிடைக்கக்கூடியதா?

**<u>தீர்வு</u>**

**5)** மனுதாரர் நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மனுதாரரை எதிர்மனுதாரர் தகுதிகாண் பருவத்தினராக

நியமிக்கப்பட்ட உத்தரவு நகல் தொ.த.சா.ஆ.1 ஆகவும், மனுதாரருக்கு எதிர்மனுதாரர் நிர்வாகம் வழங்கிய பணி நியமன ஆணை நகல் தொ.த.சா.ஆ.2 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தொழிற்சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்ததற்கான தொழிற்சங்க அறிமுக கடித நகல் தொ.த.சா.ஆ.3 ஆகவும், மனுதாரர் தொழிற்சங்கத்தில் உறுப்பினராக இணைந்ததால் பழிவாங்கும் நோக்கதில் சங்கத்தை விட்டு விலக வேண்டும் என்று நிர்வாகம் கொடுத்த அறிவிப்பு நகல் தொ.த.சா.ஆ.4 ஆகவும், இந்த செயலானது தொழிலாளர் விரோத போக்கு என்பதால் மனுதாரர் தொழிற்சங்கம் தொழிலாளர் துணை ஆணையரிடம் அளித்த புகார் கடித நகல் தொ.த.சா.ஆ.5ஆகவும், மனுதாரர் தொழிற்சங்கத்தைவிட்டு விலகாத காரணத்தினால் பொய்யான குற்றச்சாட்டை கூறி Work Order Log Book-ல் மனுதாரர் பதிவு செய்யவில்லை என்று மனுதாரருக்கு நிர்வாகம் வழங்கிய குற்றச்சாட்டு குறிப்பாணை நகல் தொ.த.சா.ஆ.7 ஆகவும், மனுதாரருக்கு நிர்வாகம் வழங்கிய கடிதங்கள் நகல் தொ.த.சா.ஆ.8,24 ஆகவும் மனுதாரர் நிர்வாகத்திற்கு கொடுத்த பதில் கடிதங்கள் நகல் தொ.த.சா.ஆ.9, 11, 14, 19, 21, 22, 25, 28, 30, 32, 34, 42, 43, 46 ஆகவும், நிர்வாகம் மனுதாரர் மீது உள்துறை விசாரணை நடத்துவதற்காக கொடுக்கப்பட்ட நியமன ஆணை நகல் தொ.த.சா.ஆ.15 ஆகவும் விசாரணை அதிகாரியின் நியமன ஆணை நகல் தொ.த.சா.ஆ.16 ஆகவும், உள்துறை விசாரணை நடவடிக்கை குறிப்புகள் நகல்கள் தொ.த.சா.ஆ.18 ஆகவும், நிர்வாகம் மனுதாரருக்கு அனுப்பிய விசாரணை அறிக்கையின் நகல் தொ.த.சா.ஆ.35 ஆகவும், இந்த அறிக்கையின் அடிப்படையில் மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகள்

நிரூபிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்ததால் அந்த அறிக்கையின் அடிப்படையில் மனுதாரர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். ஒழுக்கக்கட்டுப்பாட்டு அதிகாரியின் விரிவான ஆணை நகல் தொ.த.சா.ஆ.38 ஆகவும், ஒழுக்கக்கட்டுப்பாட்டு அதிகாரியின் ஆணைக்கு மனுதாரர் நேரிலும் தபால் மூலமும் அனுப்பிய விளக்க கடித நகல் தொ.த.சா.ஆ.39 ஆகவும், எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரருக்கு அனுப்பிய 2ம் காரணம் கோரும் அறிவிப்பு நகல் தொ.த.சா.ஆ.41 ஆகவும், மனுதாரரின் கணக்கை முடித்து அதற்கான வரைவோலையை இணைத்து நிர்வாகம் அளித்த நிரந்தர பணி நீக்க உத்தரவு நகல் தொ.த.சா.ஆ.45 ஆகவும், மனுதாரர் தொழிலாளர் துணை ஆணையர் முன்பு தாக்கல் செய்த தொழிற்தாவா மனுவின் நகல் தொ.த.சா.ஆ.47 ஆகவும், நிர்வாகம் தொழிலாளர் துணை ஆணையர் முன்பு நிர்வாகம் தாக்கல் செய்த பதிலுரை நகல் தொ.த.சா.ஆ.48 ஆகவும், தொழிலாளர் துணை ஆணையர் முன்பு நடந்த விசாரணையில் சமரசம் ஏற்படாத காரணத்தினால் சமரச முறிவறிக்கை நகல் தொ.த.சா.ஆ.50 ஆகவும் மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. மனுதாரர் தொழிற்சங்கத்தில் ஈடுபாட்டுடன் இருந்த காரணத்தினால் அதனை விரும்பாத நிர்வாகம் மனுதாரர் மீது வேண்டுமென்றே குற்றம் சாட்டி குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டதாகவும், அதே போல் விசாரணை அதிகாரி 19.09.2015 முதல் 10.05.2016 வரை நடத்தி மனுதாரர் கேட்டுக்கொண்ட தேதிகளில் விசாரணை நடத்தாமல் MW3 திரு.காளிராஜ் அவர்களை விசாரிக்க வாய்ப்பு அளிக்காமல்

ஒருதலைபட்சமாக செயல்பட்டு மிக காலதாமதமாக 20.09.2017 அன்று விசாரணை முடிவுறிக்கை வழங்கப்பட்டு உள்ளீட்டு விசாரணையில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்காமலும், மனுதாரர் தரப்பில் சாட்சியம் அளிப்பதற்கான வாய்ப்பை தராமலும், உள்துறை விசாரணை ஒருதலைபட்சமாக முடிக்கப்பட்டு வேலை நீக்கம் செய்வதற்கு முன்பு உள்ளீட்டு விசாரணை இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டு நடத்தப்பட்டதா? இல்லையா? என்ற எழுவினாவை எழுப்பாமல் உள்ளீட்டு விசாரணையில் மனுதாரர் மீது சமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்து குற்றச்சாட்டுகளோடு ஒப்பீடுகையில் வழங்கப்பட்ட தண்டனை அதீதமானது பொருளாதார மரண தண்டனைக்கு ஒப்பானது என்று குறிப்பிட்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

7. எதிர்மனுதாரர் இந்த வழக்கில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் தொழிற்சங்கத்தில் ஈடுபாட்டுடன் இருந்த காரணத்தினால் நிர்வாகம் தன்னை பழி வாங்கும் நோக்கத்தில் பொய்யான குற்றச்சாட்டுகள் கூறி குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டதாக கூறும் நிலையில் இது குறித்து நிர்வாகத்தரப்பில் எந்த ஆட்சேபனையும் செய்ய முன் வரவில்லை. மனுதாரர் மீது நடத்தப்பட்ட உள்விசாரணை முறையாகவும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்படவில்லை என்று மனுதாரர் தரப்பில் கூறப்படுவதை ஆட்சேபனை செய்து மறுக்கும் வகையில் நிர்வாகத்தரப்பில் இந்த வழக்கில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படவில்லை.

மனுதாரர் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய் என்பதால் வேண்டுமென்றே பழி வாங்கும் நோக்கத்தில் தொழிலாளர் விரோத போக்குடன் நிர்வாகம் செயல்பட்டு சட்டவிரோதமாக மனுதாரர் பணி நீக்கம் செய்யப்பட்டார் என்று மனுதாரர் தன்னுடைய மனுவில் தெரிவித்துள்ளார். எதிர்மனுதாரர் நிர்வாகத்தரப்பின் மீது மனுதாரர் கூறும் குற்றச்சாட்டுகளை ஆட்சேபிக்கும் வகையில் எதிர்மனுதாரர் தரப்பில் இந்த வழக்கில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்து எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை.

8. மனுதாரர் தரப்பில் **1982-1-Page 33**

**Workmen of Williamson Magor & Co -Vs- Williamson & Company Limited and another** என்ற வழக்கில் Any Unjust Action is Victimization என்று மாண்பமை உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ளதாகவும்,

**1984 AIR SC 505 Glaxo Laboratories - Vs - The Presiding Officer, Labour Court and 1984-AIR-SC-1361 A.L.Kalara -Vs- The Project & Equipment** என்ற வழக்குகளில் மாண்பமை உச்ச நீதிமன்றம் அளித்த தீர்வு முடிவுகளில் நிலையாணையில் இல்லாத ஓர் ஒழுங்கீனத்திற்காக தண்டிக்க முடியாது என்று தீர்வு முடிவு காணப்பட்டிருப்பதாகவும், எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜராகி சான்றிட்ட நிலையாணை முன்வைக்கப்படாத காரணத்தினால் மனுதாரர் Work Order Log bookல் எழுதவில்லை என்றால் அது தண்டனைக்குரிய குற்றச்சாட்டு என முடிவு செய்ய இயலாது என்றும்

**1993 (1) LLJ 1196 Association Chemical Workers and Others -Vs- B.D.Borude And others** என்ற வழக்கில் மனுதாரர் Bonafide முறையில் மேலதிகாரியின் ஓர் உத்தரவை செயல்படுத்தவில்லை என்றால் அது நிர்வாகத்திற்கு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் உரிமையை தரவில்லை என்று தீர்வு முடிவு காணப்பட்டிருப்பதாகவும்,

**1983 1 LLJ page 261**

**P.M.Parmar -Vs- Gujarat Electricity Board** என்ற வழக்கில் மாண்பமை உயர் நீதிமன்றம் நிர்வாகத்திடம் தண்டனை வழங்கும் அதிகாரத்தை விட்டுவிட முடியாது என்பதாலும் பிரிவு 11A சட்டத்தில் கொண்டுவரப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றும்,

**W.A.No.361/2020 R.Govindarajan -Vs- Indian Overseas Bank** என்ற வழக்கில் 16.02.2023 தேதியில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்வு முடிவில் மீண்டும் பணியும், முழு பின்சம்பளம் தொடர்பான இந்துஸ்தான் டின் ஒர்க்ஸ் மற்றும் தீபாளி குண்டு சர்வேஸ் வழக்குகளில் மாண்பமை உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்புகளில் Gainful Employment இல்லை என்றால் நிர்வாகத்தின் மோசமான நிதி நிலை காரணம் இல்லை என்றால் பின் சம்பளம் மறுக்கக்கூடாது என்று தீர்வு முடிவு காணப்பட்டுள்ளது என்றும் மனுதாரர் வேறு பணியில் இல்லை என்றும், எதிர்மனுதாரரின் நிதிநிலை நன்றாக உள்ளதாகவும் எனவே மனுபடி உத்தரவாக வேண்டும் என்று வாதிடப்பட்டது.

9. மேற்கண்டுள்ள தீர்வுகளின் அடிப்படையிலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களையும், வாதுரையும் பரிசீலக்கப்பட்டதன் அடிப்படையில் மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து நிர்வாகத்தரப்பில் நிரூபிக்க முன்வரவில்லை என்பதால் மனுதாரர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்ட காரணத்தினால் பழி வாங்கும் நோக்கத்தில் தொழிலாளர் விரோத போக்குடன் செயல்பட்டு, கண்துடைப்புக்காக உள்விசாரணை நடத்தப்பட்டு, அதன் பிறகு பணி நீக்கம் செய்யப்பட்ட உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளதால் அந்த பணி நீக்கம் சட்டவிரோதம் என்று மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே வழக்கில் மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து நிர்வாகத்தரப்பில் ஆஜராகி எந்த விளக்கமும் அளிக்கப்படாத காரணத்தினாலும் மனுதாரர் தரப்பில் அளிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த வகையிலும் எதிர்மனுதாரர் தொழிலாளர் விரோத போக்குடன் நடந்துக்கொண்டு மனுதாரர் சட்டவிரோதமாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும் மனுதாரர் தொழிற்சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்த காரணத்தினாலேயே பழி வாங்கும் நடவடிக்கையாக எதிர்மனுதாரர் செயல்பட்டிருக்க கூடும் என்று கருத தோன்றுவதால் எதிர்மனுதாரர் தரப்பு நடவடிக்கை ஆனது தொ.த.சட்டம் 25(G) பிரிவிற்கு புறம்பானதாக இருப்பதால் மனுதாரர் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

10. எனவே மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் இவ்வழக்கு அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு எதிர்மனுதாரர் அளித்த பணி நீக்க உத்தரவு ரத்து

செய்யப்படுகிறது. மனுதாரருக்கு பணி தொடர்ச்சியுடன், முழுபின் சம்பளத்துடன், இதர பண மற்றும் பணி பயன்களுடன் மீண்டும் வேலை அளிக்கப்பட வேண்டும் என்று எதிர்மனுதாரருக்கு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

முடிவாக இவ்வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு எதிர்மனுதாரர் அளித்த பணி நீக்க உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. மனுதாரருக்கு பணி தொடர்ச்சியுடன், முழு பின் சம்பளத்துடன், இதர பண மற்றும் பணி பயன்களுடன் மீண்டும் வேலை அளிக்கப்பட வேண்டும் என்று எதிர்மனுதாரருக்கு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து/ தட்டச்சருக்கு நேரில் உரைக்கப்பட்டு, அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்ததை பிழை திருத்தம் செய்து இன்று 2024ம் ஆண்டு ஜூன் மாதம் 14ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S SUJATHA
Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2024.06.19 10:42:22 +0530

தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சிபுரம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி :-</u>**

தொ.த.சா.1 எஸ்.யோகராஜா (மனுதாரர்)

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :-</u>**

| | | |
|---|---|---|
| தொ.த.சா.ஆ.1 | 28.12.2006 | தகுதிகாண் பருவத்தினராக நியமிக்கப்பட்ட உத்தரவு நகல் |

| | | |
|---|---|---|
| தொ.த.சா.ஆ.2 | 29.08.2009 | மனுதாரருக்குநிர்வாகம் வழங்கிய பணி நியமன ஆணை நகல். |
| தொ.த.சா.ஆ.3 | 04.03.2015 | தொழிற்சங்க அறிமுக கடித நகல். |
| தொ.த.சா.ஆ.4 | 21.05.2015 | மனுதாரர் சங்கத்தை விட்டு விலகவேண்டும் என்று நிர்வாகம் கொடுத்த அறிவிப்பு நகல். |
| தொ.த.சா.ஆ.5 | 22.05.2015 | தொழிற்சங்கம் தொழிலாளர் துணை ஆணையரிடம் அளித்த புகார் கடித நகல். |
| தொ.த.சா.ஆ.6 | 26.05.2015 | நிர்வாகத்தின் நினைவூட்டல் அறிவிப்பு கடித நகல். |
| தொ.த.சா.ஆ.7 | 03.07.2015 | மனுதாரருக்கு நிர்வாகம் வழங்கிய குற்றச்சாட்டு குறிப்பாணை நகல். |
| தொ.த.சா.ஆ.8 | 13.07.2015 | மனுதாரருக்கு நிர்வாகம் வழங்கிய கடித நகல். |
| தொ.த.சா.ஆ.9 | 14.07.2015 | மனுதாரர் நிர்வாகத்திற்கு கொடுத்த பதில் கடித நகல் |
| தொ.த.சா.ஆ.10 | | மனுதாரரால் அனுப்பப்பட்ட கடிதம் நிர்வாகத்தால் பெற்றுக்கொள்ளப்பட்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல். |
| தொ.த.சா.ஆ.11 | 21.07.2015 | மனுதாரர் நிர்வாகத்திற்கு அளித்த பதில் கடித நகல் |
| தொ.த.சா.ஆ.12 | | மனுதாரர் அளித்த கடிதத்தை நிர்வாகம் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல். |
| தொ.த.சா.ஆ.13 | 22.07.2015 | நிர்வாகம் மனுதாரருக்கு அளித்த தற்காலிக பணி நீக்க ஆணை நகல். |
| தொ.த.சா.ஆ.14 | 25.07.2015 | மனுதாரர் நிர்வாகத்திற்கு எழுதிய கடித நகல். |
| தொ.த.சா.ஆ.15 | 03.08.2015 | நிர்வாகம் மனுதாரர் மீது உள்துறை விசாரணை நடத்துவதற்காக கொடுக்கப்பட்ட நியமன ஆணை நகல். |
| தொ.த.சா.ஆ.16 | 05.08.2015 | விசாரணை அதிகாரியின் நியமன ஆணை நகல். |
| தொ.த.சா.ஆ.17 | 07.09.2015 | உள்துறை விசாரணை குறித்து நிர்வாகம் மனுதாரருக்கு அனுப்பிய கடித நகல். |

| | | |
|---|---|---|
| தொ.த.சா.ஆ.18 | 19.09.2015 முதல் 10.05.2016 | உள்துறை விசாரணை நடவடிக்கை குறிப்புகள் நகல்கள். |
| தொ.த.சா.ஆ.19 | 12.05.2016 | மனுதாரர் நிர்வாகத்திற்கு எழுதிய கடித நகல். |
| தொ.த.சா.ஆ.20 | | மனுதாரர் அளித்த கடிதத்தை நிர்வாகம் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல். |
| தொ.த.சா.ஆ.21 | 16.06.2016 | மனுதாரர் நிர்வாகத்திற்கு எழுதிய கடித நகல். |
| தொ.த.சா.ஆ.22 | 22.08.2016 | மனுதாரர் நிர்வாகத்திற்கு எழுதிய கடித நகல். |
| தொ.த.சா.ஆ.23 | | மனுதாரர் அளித்த கடிதத்தை நிர்வாகம் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல். |
| தொ.த.சா.ஆ.24 | 14.09.2016 | முகவரி மாற்றம் குறித்து மனுதாரருக்கு நிர்வாகம் அனுப்பிய கடித நகல். |
| தொ.த.சா.ஆ.25 | 24.10.2016 | மனுதாரர் நிர்வாகத்திற்கு எழுதிய கடித நகல். |
| தொ.த.சா.ஆ.26 | | மனுதாரர் அளித்த கடிதத்தை நிர்வாகம் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல். |
| தொ.த.சா.ஆ.27 | 03.11.2016 | போனஸ் குறித்து நிர்வாகம் மனுதாரருக்கு அனுப்பிய கடித நகல். |
| தொ.த.சா.ஆ.28 | 11.11.2016 | மனுதாரர் நிர்வாகத்திற்கு அனுப்பிய மறுப்புரை கடித நகல். |
| தொ.த.சா.ஆ.29 | | மனுதாரர் நிர்வாகத்திற்கு அனுப்பிய மறுப்புரை கடிதத்தை நிர்வாகம் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல். |
| தொ.த.சா.ஆ.30 | 11.04.2017 | மனுதாரர் நிர்வாகத்திற்கு எழுதிய கடித நகல். |
| தொ.த.சா.ஆ.31 | | மனுதாரர் கடிதத்தை நிர்வாகம் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல். |
| தொ.த.சா.ஆ.32 | 15.06.2017 | மனுதாரர் நிர்வாகத்திற்கு எழுதிய கடித நகல். |

| | | |
|---|---|---|
| தொ.த.சா.ஆ.33 | | மனுதாரர் கடிதத்தை நிர்வாகம் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல். |
| தொ.த.சா.ஆ.34 | 23.08.2016 | மனுதாரர் நிர்வாகத்திற்கு எழுதிய கடித நகல். |
| தொ.த.சா.ஆ.35 | 20.09.2017 | நிர்வாகம் மனுதாரருக்கு அனுப்பிய விசாரணை அறிக்கையின் நகல். |
| தொ.த.சா.ஆ.36 | 26.09.2017 | விசாரணை அறிக்கை குறித்து மனுதாரர் நிர்வாகத்திற்கு அஞ்சல் மூலம் அனுப்பிய கடித நகல் |
| தொ.த.சா.ஆ.37 | | மனுதாரர் கடிதத்தை நிர்வாகம் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல். |
| தொ.த.சா.ஆ.38 | 14.12.2017 | ஒழுக்கக்கட்டுப்பாட்டு அதிகாரியின் விரிவான ஆணை நகல். |
| தொ.த.சா.ஆ.39 | 21.12.2017 | ஒழுக்கக்கட்டுப்பாட்டு அதிகாரியின் ஆணைக்கு மனுதாரர் நேரிலும் தபால் மூலமும் அனுப்பிய விளக்க கடித நகல். |
| தொ.த.சா.ஆ.40 | | மனுதாரர் கடிதத்தை நிர்வாகம் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல். |
| தொ.த.சா.ஆ.41 | 04.06.2019 | நிர்வாகம் மனுதாரருக்கு அனுப்பிய 2ம் காரணம் கோரும் அறிவிப்பு நகல். |
| தொ.த.சா.ஆ.42 | 10.06.2019 | மனுதாரர் நிர்வாகத்திற்கு எழுதிய கடித நகல். |
| தொ.த.சா.ஆ.43 | 16.06.2019 | காரணம் கோரும் அறிவிப்பிற்கு மனுதாரர் அனுப்பிய பதில் கடித நகல். |
| தொ.த.சா.ஆ.44 | | மனுதாரர் கடிதத்தை நிர்வாகம் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல். |
| தொ.த.சா.ஆ.45 | 31.07.2019 | மனுதாரரின் கணக்கை முடித்து அதற்கான வரைவோலையை இணைத்து நிர்வாகம் அளித்த நிரந்தர பணி நீக்க உத்தரவு நகல். |

| | | |
|---|---|---|
| தொ.த.சா.ஆ.46 | 08.08.2019 | மனுதாரர் நிர்வாகத்திற்கு எழுதிய கடித நகல். |
| தொ.த.சா.ஆ.47 | 07.11.2019 | மனுதாரர் தொழிலாளர் துணை ஆணையர் முன்பு தாக்கல் செய்த தொழிற்தாவா மனுவின் நகல். |
| தொ.த.சா.ஆ.48 | 06.02.2020 | தொழிலாளர் துணை ஆணையர் முன்பு நிர்வாகம் தாக்கல் செய்த பதிலுரை நகல். |
| தொ.த.சா.ஆ.49 | 03.03.2020 | நிர்வாகத்தின் பதிலுரைக்கு மனுதாரர் அனுப்பிய மறுப்புரை கடித நகல். |
| தொ.த.சா.ஆ.50 | 16.03.2020 | சமரச முறிவறிக்கை நகல். |

**எதிர்மனுதாரர்/நிர்வாகம் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-** இல்லை.

S SUJATHA
Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2024.06.19 10:42:37 +0530

தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சிபுரம்.